OS 40/2019

வா.சா.1 கேசவன் த/பெ குமார்

நாள் 14.07.2025

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1. பாரதியார் தெரு கதவு எண்1Aல் நான் தற்போது குடியிருக்கிறேனா என்றால் ஆமாம். அந்த சொத்து என் பாட்டி ரத்தினம் அம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீதுகள் எனது தாத்தா கண்ணன் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். (அந்த வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை 5 **பி.வா.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) என்னிடம் காட்டப்படும் குடிநீர் கட்டண வரி ரசீதுகள் எனது தாத்தா கண்ணன் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். (அந்த குடிநீர் கட்டண வரி ரசீதுகள் எண்ணிக்கை 3 **பி.வா.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது வீட்டிற்கு 2018க்கு முன்பு எனது தாத்தா பெயரிலும் அதன் பிறகு எனது பெயரிலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். வீட்டிற்கான பட்டா என் தாத்தா பெயரில் இருக்கிறது என்றால் 2018க்கு பிறகு எனது பெயரிலும் அண்ணன் பாண்டியன் பெயரிலும் மாற்றம் ஆகி உள்ளது. அந்த பட்டாவை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்யவில்லை.

2. எனது தாயார் கௌரியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். எனது பாட்டி ரத்தினம் அம்மாளுக்கு எனது அம்மா ஒரே வாரிசு என்றால் சரிதான். ரத்தினம் அம்மாளுக்கு எனது தாத்தா கண்ணனும் எனது அம்மா கொளரியும் வாரிசுகள் என்றால் சரிதான். பாரதியார் தெருவில் உள்ள வீட்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ரத்தினம் அம்மாள் இறந்த பிறகு பாரதியார் தெருவில் உள்ள வீடு எனது தாத்தா கண்ணன் மற்றும் எனது அம்மா கொளரிக்கும் சரிபாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். கண்ணனுக்கு உரிமை உள்ள பாரதியார் தெருவில் உள்ள வீட்டை வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.